**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.54/2016**

தேதி . 30.11.2021

பெயர் . பாபு நாயுடு

த/பெ . சுப்பிரமணி நாயுடு

வயது . 68

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் 62 சென்ட். 62 சென்டில் உரிமை உண்டா என்றால் என் அப்பாவின் 21 சென்டில் எனக்கு 1/3 உரிமை உண்டு. 1/3 எவ்வளவு என்றால் 7 சென்ட். வழக்கில் 62 சென்டிலும் பங்கு கேட்கிறேன் என்றால் 7 சென்ட்டிற்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 7 சென்டு தான் வேண்டும் என்று வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்றால் என் அப்பாவின் பாகத்திலிருந்து 7 சென்ட் உரிமை உண்டு. என் அப்பாவிற்கு எப்படி உரிமை வந்தது என்றால் கிரைய சொத்தும் உள்ளது அதில் பூர்வீக சொத்தும் உள்ளது. என் அப்பா கிரையம் பெற்ற பத்திரம் மற்றும் பூர்வீக சொத்தும் உள்ளது என்பதை நிருபிக்க ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த பிறகு ஆவணம் உள்ளதா என்று தேடினேனா என்றால் வருவாய் ஆவணம் பார்த்தேன். எங்களுக்குள் பாகப்பிரிவினை நடந்ததா என்றால் 2012ல் வாய் மொழியாக பாகப்பிரிவினை நடந்தது. வாய் மொழியாக யார் யார் இடையில் நடந்தது என்றால் நானும், என் தம்பி வேணுகோபால் 5ம் பிரதிவாதி, நாகராஜன் வாரிசுகள் சிரஞ்சிவி, சந்திர சேகரன் 3, 4 பிரதிவாதிகள். என் அம்மா பாப்பம்மாள் எப்போது இறந்தார் என்றால் என்றால் சரிதான் 13.10.2011. வாய்மொழி பாகப்பிரிவினைக்கு எழுது மூல ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக எவ்வளவு சொத்து பிரிக்கப்பட்டது என்றால் 3 ஏக்கர் 38 சென்ட்டில் 1/3 பாகம். அதில்

எந்தெந்த சர்வே எண் எனக்கு வந்தது என்பது தெரியுமா என்றால் சர்வே எண் 23. வழக்கில் எனக்கு எவ்வளவு விஸ்திரணம் வந்தது என் சகோதரருக்கு எவ்வளவு விஸ்திரணம் எந்த சர்வே எண்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. வழக்கு சொத்து 21 சென்ட் பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து 21 சென்ட் பட்டா, சிட்டா, அடங்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் பாகத்தில் வழக்கு சொத்து 21 சென்ட் வந்தது என்றால் என்னுடைய பாகம் சேர்த்து தான் உள்ளது. என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் அவர்களுடைய பங்கு 21 சென்ட்யை 6.3.2002ல் கிரையம் கொடுத்தார்கள் சுவாதிணம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் தெரியாது. என் அம்மா கை நாட்டு போடுவார் , சகோதரர்கள் நாகராஜன், வேணுகோபால் கையெழுத்து போடுவார்கள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி 21 சென்ட்டில் சர்வே எண் 23/3எ ராதாகிருஷ்ணன் உயிருடன் இருந்த வரையில் பயிர் செய்து வந்தார் என்றால் இல்லை. யார் பயிர் செய்து வந்ததது என்றால் நான் என்னுடைய பங்கு 7 சென்ட்டில் மட்டும் பயிர் செய்து வந்தேன். எந்த காலம் வரை என்றால் 2011 பிப்பரவரி முதல் அக்டோபர் 2016 வரை அனுபவித்து வந்தேன். என்ன பயிர் செய்தேன் என்றால் வெண்டகாய், கத்திரிக்காய். பாசனம் உள்ளதா என்றால் குழாய் கிணறு மூலமாக பசனம் செய்தேன். குழய் கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் பத்திரம் பார்த்து தான் சொல்லமுடியும். யார் பெயரில் உள்ளது என்றால் பத்திரம் பார்த்து தான் சொல்லமுடியும். யார் மின்சார கட்டணம் செலுத்துகிறார் என்றால் என் சகோதரர் வேணுகோபால் பார்த்து கொள்கிறார். சர்வே எண் 23/1எ தான் குழாய் கிணறு தான் உள்ளது அதன் மூலம் தான் 6ம் பிரதிவாதி மற்றும் அவருடைய வாரிசுகள் பாசனம் செய்தார்கள் என்றால் இல்லை. 6ம் பிரதிவாதி மற்றும் அவருடைய வாரிசுகள் வழக்கு சொத்தில் சவுக்கு பயிர் செய்து 6 மாதத்திற்கு முன்பு தான் அறுவடை செய்தார்கள் என்றால் சரிதான். என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் விற்ற விவரம் 2002லே தெரியும் என்றால் தெரியாது. நான் வழக்கு சொத்தில் வசிக்கிறேன் என்றால் இல்லை நான் Airforce

வேலை செய்கிறேன் வருடத்திற்கு ஒரு முறை வந்து போவேன். நான் வந்து போகும் போது வழக்கு சொத்தில் யார் பயிர் செய்கிறார்கள் என்று பார்த்தது உண்டா என்றால் பயிர் இருந்தது ஆனால் யார் பயிர் செய்தார் என்று கேட்கவில்லை. பயிர் செய்தது அதில் வரும் மகசூல் எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. விற்ற விவரம் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அக்டோபர் 2016. நோட்டிஸ் கொடுத்தேனா என்றால் இல்லை. 6ம் பிரதிவாதிக்கு என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் விக்கிரைய செய்ததால் அவர் தான் உரிமையாளர் என்றால் இல்லை. வாய்மொழியாக நான் என்ன சொத்து பெற்றேன் என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக யார் யாருக்கு எந்த சொத்து வந்து வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் அவர்களுக்கு வந்த பாகத்தை 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கை காலம் தவறி தாக்கல் செய்ததால் காலவரையறை சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணமும் வழக்கு சொத்திற்கு எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 6.3.2002ல் சகோதரர்கள் அடமான பத்திரம் தான் கொடுத்தார்கள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் என் சகோதரர்கள் சொன்னதால் சொல்லியுள்ளேன். அடமான பத்திரமா அல்லது கிரைய பத்திரமா என்று 6ம் பிரதிவாதிக்கோ என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் எந்தவிதமான பிரச்சனை இல்லை என்றால் இல்லை. பதிலுரையில் தெரிந்த பிறகு அதை பற்றி சகோதரர்களிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் உண்மைக்கு மறாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா, சகோதரர் நாகராஜன், வேணுகோபால் விற்றது தெரிந்தே பணம் வாங்க பொய்யான வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**